**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 215/2018 P.W. 4/L.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. அனிஷா ராணி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. ராமு | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அ.சா1 என்னுடைய தந்தை. 11.11.2014 அன்று மாலை 04.30 மணிக்கு மேல் 05.00 மணிக்குள் இருக்கும். நான் கல்லூரிக்கு சென்றுவிட்டு எங்கள் வீட்டிற்கு வந்தேன். அப்போது என் தந்தை வீட்டிலிருந்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் அப்போது இருசக்கர வாகனத்தில் எங்கள் வீட்டிற்குவந்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது தந்தையைப் பார்த்து தேவடியாமவனே என்று தகாத வார்த்தையால் பேசினார்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கள் வீட்டில் கேட்டிற்குள் வந்து எனது தந்தையை பிடித்து இழுத்து காலால் என் தந்தையை நெஞ்சில் மிதித்தார். எனது தந்தைக்கு நெஞ்சு, கை, கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது. மறுபடியும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது தந்தையை தாக்குவதற்காக கைகளை மடக்கிக்கொண்டு வந்தார். அந்த அடி எனது தந்தையின் கன்னத்தின் மீது பட்டுவிட்டது. நானும் எனது அக்கா ஜெனிஷா ராணி என்பவரும் சத்தம் போடவும் வீட்டின் அருகில் இருந்த நபர்கள் கூடிவிட்டார்கள். அவர்கள் ..................அனைவரும் சேர்ந்து குற்றம்

சுமத்தப்பட்ட நபரை தடுத்தார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னையும் என் அக்காவையும் தாக்க முயற்சி செய்தார். எங்கள் மீது எங்கள் தந்தை தடுத்ததால் அடிபடவில்லை.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவர் வந்த இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு ஓட முயன்றார். எனது தந்தை அவரது வாகனத்தை எடுக்கவிடாமல் தடுத்தார். மறுபடியும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது வாகனத்தை எடுக்க முயற்சி செய்தார். அதன்பிறகு அவர் அங்கிருந்து நடந்துச் சென்றுவிட்டார். நாங்கள் எங்கள் தந்தையை சிகிட்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். குற்றம் சுமத்தப்பட்ட நபர் வந்த இருசக்கரவாகனத்தின் எண் TN 75. R.4450 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

__குறுக்கு விசாரணை__ :

சம்பவம் நடந்த நேரம் நான், என் சகோதரி, அப்பா, அம்மா தவிர்த்து வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கள் வீட்டிற்குள் வரவில்லை என்றால் சரியல்ல. வந்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மனைவி மார்த்தாண்டத்தில் பேராசிரியராக உள்ளார் என்றால்சரிதான். சம்பவ காலகட்டத்தில் நான் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். கல்லூரி முடித்து அரசுபேருந்தில் தான் வருவேன் என்றால் சரிதான். கல்லூரி 03. 30 வரை இருக்கும் என்றால் சரிதான். கல்லூரி வளாகத்தில் இருந்து பேருந்து நிறுத்தத்திற்கு வர அரை மணி நேரம் நடக்கவேண்டுமென்றால் இல்லை 7 நிமிடத்தில் வந்துவிடலாம்.

2. ஜெயசேரகன் மருத்துவமனை பேருந்து நிறுத்தத்திலிருந்து திங்கள் சந்தை வரைக்கும் ஒரு பேருந்திலும், திங்கள்சந்தையில் இருந்து மண்டைக்காட்டிற்கு மற்றொரு பேருந்திலும் செல்வேன் என்றால் சரிதான். மண்டைக்காட்டிலிருந்து எங்கள் வீட்டிற்கு நான் ஸ்கூட்டியில் சென்றுவிடுவேன். எனக்கு லைசன்ஸ் உள்ளது. நான் மண்டைக்காட்டிலிருந்து நடந்து தான் வீட்டிற்கு செல்வேன் என்றால் சரியல்ல. மண்டைக்காட்டிலிருந்து நடந்து செல்ல வேண்டுமென்றால் எங்கள் வீட்டிற்கு செல்ல 10 நிமிடம் ஆகும்.

3. 03.30 மணிக்கு கல்லூரி முடிந்தால் நான் வீட்டிற்கு வர 06.00 மணி ஆகும் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று என் தந்தை படிக்கட்டிற்கு மேலேயும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கீழே இருந்தார்கள் என்றால் சரிதான். என் தந்தை மேலே இருந்து அவரது காலால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை நெஞ்சில் எட்டி உதைத்தார் என்றால் சரியல்ல. மீண்டும் என் தந்தை மிதிக்க முற்படும் போது நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்றால் இல்லை. அதனால் தான் என் அப்பாவின் கால் விரல்களில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டத்திற்கு அருகில் என் அப்பாவிற்கு தோட்டம் உள்ளது என்றால் சரிதான். என் அப்பாவின் தோட்டத்திற்கு வாகனங்களை கொண்டு செல்ல இயலாது என்றால் சரிதான். 11.11.2016 அன்று காலை என் அப்பா குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம்

வழியாக அவரது தோட்டத்திற்கு ஜே.சி.பி வாகனத்தை எடுத்துச் சென்றார் என்றால் - ஆம். என் அப்பா அவரிடம் கொண்டு போக கேட்டிருந்தார். ஜே.சி.பி வாகனம் சென்றதால் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டத்திலிருந்த மரங்களுக்கு சேதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்மனுவை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான்.

5. நான் எழுதிய புகாரில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்அப்பாவை நெஞ்சில் மிதித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி மேற்படி புகார் மனுவைப் படித்துப் பார்த்து விட்டு அவ்வாறு சொல்லப்படவில்லை, அடிவயிறு என்று சொல்லப்பட்டுள்ளதாக சொல்கிறார். நான் முதல் விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் அப்பாவை கன்னத்தில் தாக்கியதாக சொன்னதைப் பொறுத்து புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி படித்துப்பார்த்துவிட்டு அவ்வாறு சொல்லவில்லை என்று கூறுகிறார்.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கள் வீட்டிற்குள் வரவில்லை என்றும் நான் உண்மைக்கு மாறாக வந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.